"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.293,25,61,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (26–4–2022), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

67. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் லிமிடெட் நிறுவனத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை, [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

68. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) முறையே 105(2) மற்றும் 104(4) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

[2022 ஏப்ரல் 25

69. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1) (b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

70. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் அறுபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்குகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

120. மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

121. மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

122. மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

123. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் ஆகியோர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2022–2023. (தமிழ்)

―――――